அங்கேயிருக்கக்கூடிய பொதுமக்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற பிரச்சினைக் குறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(ஆள) பேரவையில் இருக்கை ஒதுக்குவது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன் அவர்கள்.*

திரு. ஜெ. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவருக்கு என்னுடைய விண்ணப்பம். என்னுடைய இருக்கைக் குறித்து தங்களிடத்திலே எங்களுடைய கொறடா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதை பற்றியெல்லாம் என்னுடைய அறையில் வந்து பேசுங்கள், உட்காருங்கள். அதை பற்றியெல்லாம் என்னுடைய அறையில் வந்து பேசுங்கள், உட்காருங்கள், உட்காருங்கள்.*

(ஆஏ) திருவையாறு தொகுதி, திருப்பாளனம் கிராமம், மின்சாரம் தாக்கி உயிரிழந்த மற்றும் சாலை விபத்தில் உயிரிழந்தவர்கள் குடும்பங்களுக்கு நிவாரணம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன் அவர்கள்.*

திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவையாறு தொகுதி, திருப்பாளனம் கிராமத்தில் செந்தில்குமார் என்ற பந்தல் அமைக்கும் தொழிலாளி, பந்தல் அமைக்கின்ற பணியில் ஈடுபட்டிருந்தபோது மின்சாரம் தாக்கி உயிரிழந்திருக்கின்றார். ஏழ்மையான அவருடைய குடும்பத்திற்கு நிதி வழங்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்க்கின்றேன்.*

முற்பகல் 10–35

இரண்டு நாட்களுக்கு முன்பு தஞ்சை, வல்லம் பகுதியில் அரசுப் பேருந்தும் இரும்புக் கம்பி ஏற்றிவந்த ஆட்டோவும் மோதியதில் 10–க்கும் மேற்பட்டோர் இறந்திருக்கின்றனர். அவர்கள் அனைவருமே கல்லூரி மாணவிகள். மிகக் கொடூரமான இந்த விபத்தில் இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு அரசின் சார்பில் இழப்பீடு அறிவிக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும், அதை உயர்த்தித்